சுற்றறிக்கை இலக்கம்: 07/2002

எனது இலக்கம்: வி.பி.இ. 1/42
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 340, ஆர். ஏ. த மெல் மாவத்தை,
கொழும்பு 03.
2002.06.10

அனைத்து மாவட்டச் செயலாளர்கள் / மேலதிக பதிவாளர் நாயகங்களுக்கு.

**விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புதல்**

உங்கள் மாவட்டத்தில் நிலவுகின்ற விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டு கோரப்பட்டுள்ளன.

02. இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி முடிவடைந்தவுடன், உரிய நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி, உங்களது பரிந்துரைகளை விரைவாக எனக்கு அனுப்பி வைக்கவும்.

03. இறுதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் உங்களது பரிந்துரைகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

04. உங்கள் மாவட்டத்தில் இதுவரை அறிக்கைப்படுத்தப்படாத விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் வெற்றிடங்கள் ஏதேனும் இருப்பின், அவை தொடர்பான விபரங்களையும் விரைவாக எனக்கு அனுப்பி வைக்கவும்.

(ஒப்பம்)
பதிவாளர் நாயகம்.

பிரதி: செயலாளர், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.